1973 ஆகஸ்ட் 14]

வந்திருக்கும். முழுப் பணம் கட்டினுலொழிய டிகிரி கோர்ஸ் வராது. அந்த 5 லட்ச ரூபாயையும் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்து, சிபார்சு செய்து பெற்றுத்தந்தால், அதற்குப் பிறகு டிகிரி கோர்ஸ் பற்றி எண்ணலாம். முழுத் தொகை வராத வரையில் டிகிரி கோர்ஸ் தரக்கூடாது என்று கொள்கை வைத்திருக்கிறோம்.

கூறைநாடு பகுதியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

*126 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம், கூறைநாடு பகுதியில் பெண்களுக்கு தனியே ஒரு உயர் நிலைப்பள்ளி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

நாகூர் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள்.

*127 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

நாகூர், ஏர்வாடி போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நாகூருக்கு நிறைய முஸ்லீம்கள் வருகிற காரணத்தால், இனிமேலாவது சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். ஏராளமான மக்கள் கூடுகிற எல்லா இடங்களிலும் சுற்றுலா மாளிகை வேண்டுமென்ற பேரவா இருந்தாலும் அதை நிறைவேற்றிக்கொள்ளத்தக்க அளவிற்கு நிதி வசதி, மற்ற வசதிகள் இல்லை. இருக்கிற நிதி வசதியை வைத்துக் கொண்டு, மற்ற நாட்டவர், வெளி மாநிலங்களிலிருந்து அடிக்கடி வந்து போகும் கொடைக்கானல், குன்னூர், ஊட்டி, குற்றாலம் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகை கட்டவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் படிப்படியாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இப்போது சுற்றுலா மாளிகை கட்டும் முயற்சி இல்லையென்றாலும், நாளடைவில் வரலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நாகூர், ஏர்வாடி, முத்துப்பேட்டை போன்ற இடங்களுக்கு முஸ்லீம்கள் மட்டும் வரவில்லை, இந்துக்களும் வருகிறார்கள். எல்லோருக்கும் தங்குவதற்கு வசதி இல்லாமல்

சுகாதாரக்கேடும், மற்றும் பலவிதமான வியாதிகளும் பரவுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, சுற்றுலா விடுதிகளை அங்கே அரசாங்கமே கட்ட வில்லையென்றாலும், அங்கே வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு, அரசாங்கம் அந்தந்த தர்காக்களுக்கு ஒதுக்கி, சுற்றுலா மாளிகை கட்ட இனியாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எப்படிப்பட்ட வருமானம் வருகிறது என்ற விவரக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. வெளிநாட்டி லிருந்து அதிகமான பேர்கள் வந்து தங்குகிற இடங்களில் சுற்றுலா மாளிகைகளைக் கட்ட சுற்றுலா வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அந்தந்த இடங்களின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப, அவைகள் நிறைவேற்றப்படு கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், அரசாங்கமே சுற்றுலாத் துறை மூலம் கட்டாமல், வேறு பல வாய்ப்புகளிலிருந்து பணம் வருமேயானால் சுற்றுலா விடுதிகளைக் கட்டலாம். குறிப்பாக, அறநிலைய பாதுகாப்புத் துறை மூலமாக பல கோவில்களில், பல இடங்களில் சுற்றுலா மாளிகை எழுப்பப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வசதிகள் இருந்தால் அந்த முயற்சி ஆராயப்படலாம்.

Seats in Medical Colleges.

* 128 Q.—Thiru N. DENNIS : }
Thiru N. K. PALANISAMY : } Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to reduce the number of seats in the Medical Colleges in the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது இருக்கும் எண்ணிக்கையால், 'ஓவர்-கிரௌடிங்' மூலமாக, மாணவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை நடத்துகிறதா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக் கிறது. இப்போது குறைக்க வேண்டிய நிலை இல்லை என்ற ஒரு கருத்து காரணமாக, இப்போது இந்த ஆண்டு குறைக்கப்படவில்லை, ஆனால் பொதுவாக, பயிற்சி பெறுகிற மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய எல்லா விதமான வாய்ப்புகளும் நல்ல முறையில் கிடைக்கவேண்டு மானால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால்தான் சிறப்பா பயிற்சி கொடுக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள்